# பிரவாகினி

செய்தி மடல் பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்

WERC

தை/ஆனி 2018 இதழ் 41




இந்த இதழில்....


- ✱ புதுமையின் பாதையில்..... 2
- ✱ CARE & SHARE செயற்திட்டம் 4
- ✱ பால் / பால்நிலை 5
- ✱ நட்சத்திரங்களுடன் ஒரு மாலைப்பொழுது 6
- ✱ புதுமைகள் பரப்பு பெண்ணே... 10
- ✱ திலகமிழந்தவள்! 11
- ✱ கட்டை அவிழ்த்திடடி! 11
- ✱ இதயபூர்வமான நன்றிகள்.... 12
- ✱ கிழக்கிற்கு விஜயம் 13
- ✱ மகளிர் தின ஊர்வலம் 2018 நம்பிக்கையின் கூற்று 13
- ✱ கருகிய மலர்கள் 14


**Connect with WERC**

https:// www.facebook.com/WERCsl

https://twitter.com/#!/WERC4women

Webpage: www.wercsl.org

## ஆசிரியர் பக்கம்

அனைத்துப் பரிமாணங்களிலும் ஆண்களுக்கு ஊக்கமளித்து உறுதுணையாகத் திகழும் பெண்களின் பாதுகாப்பு இன்னமும் கேள்விக் குறியாகவே இருக்கின்றது. சர்வதேச ரீதியிலும், தேசிய ரீதியிலும் பெண்களைப் பாதுகாக்கும் சட்டங்கள் பல காணப்படுகின்றன. ஆனால் அவை பின்பற்றப்படுகின்றனவா என்றால் இல்லை என்றே கூறவேண்டும்.

இன்று உலகில் பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் அதிகரித்து வருகின்றமையைக் காணக்கூடியதாக உள்ளது. இது குறித்த செய்திகளை ஊடகங்கள் வாயிலாகத் தெரிந்து கொள்ளும்போது எங்கோ யாருக்கோ வன்கொடுமை நடந்திருக்கின்றது என்று அலட்சிமாக இருப்பது பெருந்தவறு.

மகளிர் தினத்தின் அடிப்படை பெண்ணியம் பேசுவதுமட்டுமல்ல, மாறாக ஆணாதிக்கத்திலிருந்து விடுபட்டு பல்வேறு போராட்டங்களின் பின் "தாமும் சாதிக்க முடியும்" என்ற ஆளுமையின் வெற்றிதான் பெண்களின் பாதுகாப்பு.

ஒரு சமூகத்தின் முன்னேற்றம் என்பது வெறுமனே கற்களையும் மண்ணையும் கொண்டு கட்டப்படும் கட்டடங்களால் மாத்திரம் ஏற்படாது. ஒரு பெண் சமுதாயத்தில் எல்லாப் பீடங்களிலும் மதிக்கப்படும் போது அத்தகைய சமூகம் பாரிய முன்னேற்றத்தை அடைகின்றது. இதற்குப் பல நாடுகளும், பல சமூகங்களும் சான்றாக அமைகின்றன. எவ்வாறெனின் பெண்கள் மதிக்கப்பட வேண்டியவர்கள், பாதுகாக்கப்பட வேண்டியவர்கள். அவர்கள் "வலிமையற்றவர்கள்" "மென்மையானவர்கள்" என்ற பிழையான கொள்கைகளின் பின்னணியில் அல்ல. பெண் சமுதாயத்தில் சம உரிமைக்கு உரித்தானவள் சம அந்தஸ்த்து உடையவள். பொருளாதாரத்தில் சம பங்கேற்பவள் என்ற காரணங்களினால் அவள் ஆண்களுக்கு நிகரானவள் என்ற நிலைப்பாட்டிலாகும்.

இன்றைய கால கட்டத்தில் பெண்கள் வீட்டிலிருந்தாலும் வெளியிற் சென்றாலும் அவர்களுடைய பாதுகாப்பு என்பது உத்தரவாதமற்றிருப்பது வேதனைக்குரிய விடயமாகும். எம்மைச் சுற்றி நடக்கும் அசம்பாவிதங்கள் எம்மை கிலி கொள்ள வைக்கின்றன. பெண்களுக்கு மட்டுமல்ல பெண் குழந்தைகளுக்கும் சமூகத்தில் பாதுகாப்பும் சுதந்திரமும் இல்லை என்றே கூறலாம். நாட்டில் மனித வடிவில் மிருகங்களா நடமாடுகின்றன? என்ற கேள்வி எழுகின்றது. நாகரீகம் வளர்ந்து விட்டதாகக் கூறப்பட்டாலும் மனிதர்கள் அவ்வாறு நடப்பதாகத் தெரியவில்லை.

மாற்றங்கள் மட்டுமே மாறாதவை மற்றவை எல்லாம் மாறிக்கொண்டே இருப்பவை. பெண்களைத் தவறான பார்வையோடு பார்க்கும் ஆண்களே மாறவேண்டும். காலங்காலமாகப் பெண் சமுதாயம் பல சவால்களுக்கு மத்தியிலேயே வாழ்ந்து வருகின்றது. பெண்களின் உரிமையைக் கொடுப்பது பரிசு அல்ல! அது அவர்களின் உரிமை! பெண் சமூகம் எதைக் கேட்கிறது?

பாதுகாப்பான இரவுகள்!
பாதுகாப்பான தெருக்கள்!
பாதுகாப்பான இல்லங்கள்!

- ஜெயமாலா சிவச்செல்வம்

## புதுமையின் பாதையில்.....

"வீட்டில் சமைப்பதும், வீட்டு வேலைகளைச் செய்வதும் தான் உனது கடமை" என்ற தொனிப் பொருளிலிருந்து வெளிவந்தவர் Chef. துஷாந்தினி ஒடுக்குமுறைச் சமுதாயத்தில் சிக்கித் திணறி வாழ்வுப்பாதையில் கரைசேர வழிதெரியாது தத்தளித்து நிற்கும் பெண்களுக்கு, அவர்களது ஆற்றலில் நம்பிக்கை வைத்து அவர்களைப் பற்றியுள்ள அறியாமை விலங்குகளை உடைத்துத் தானும் தனது குடும்பமும் என்ற சின்னஞ்சிறிய வட்டத்திற்குள் தன்திறமையையும், சக்தியையும் தியாகம் செய்து வந்த, பெண்களை அக்குறுகிய வட்டத்தை விட்டு வெளிக்கொணர்வதற்கு இவரையே முன்னுதாரணமாகக் கொள்ளலாம்.



*"Sunrise" Jetwing Group, Passikudah*
*Chef - P. Thushanthini*

பெரிய பெரிய ஹோட்டல்களில் ஆண்களே சமையலுக்குத் தலைமைத்துவம் தாங்குவதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. ஆனால் ஒரு பெண்ணாக இருந்தும் துணிகரமாக இந்தத் துறையைத் தேர்ந்தெடுத்திருப்பது பாராட்டத்தக்க தாகும்.

பெண்கள் வீட்டில் சமைப்பதும், ஆண்கள் ஹோட்டல் துறையில் சமையலுக்குத் தலைமை தாங்குவதும் குழப்பமான இருவேறு தன்மைகளைக் கொண்டதாக இருக்கிறது. ஆனால் சமையலறைக் கலாச்சாரத்தையே மாற்றியமைத்து ஏனைய பெண்களுக்கு முன்னுதாரணமாக இந்தத்துறையில் மிளர்கிறார் Chef. துஷாந்தினி. இவ்வெழுச்சியூட்டும் துணிகரமான முன்னெடுப்பால் ஒரு பெரிய ஹோட்டலில் பிரதான சமையலாளராகப் பதவி வகிக்கிறார்.

இவர் 2013ஆம் ஆண்டு Jetwing Youth Development Programme (JYDP)ல் இணைந்து கொண்டார். இதில் அவர் உணவு தயாரித்தல், சிற்றுண்டிகள், பானங்கள் தயாரித்தல், சுத்தம் பேணுதல், மட்டுமன்றி அலுவலக முகாமைத்துவம், போன்றவற்றில் பயிற்சி எடுத்துக் கொண்டார். அதுமட்டுமன்றி அப்பயிற்சிக்காலத்தில் தொழில்நுட்ப அறிவு, சிறந்த ஆங்கிலஅறிவு என்பவற்றுடன் அத்துறைக்குத் தேவையான உபசரணை முறைப் பயிற்சியையும் மிகவும் துல்லியமாகக் கற்றுக் கொண்டார்.

ஏறக்குறைய 06 மாதங்கள் பயிற்சிக் காலமாக இருந்தது. இதன் மூலம் சிகிரியாவிலுள்ள Jetwing Vil Uyana Hotelஇல் இரண்டரை ஆண்டுகள் தனது பணியினைத் தொடர்ந்தார். அதன் பிறகு பாசிக் குடாவிலுள்ள Jetwing இன் "Sunrise" என்ற ஹோட்டலின் உயிர்நாடியான சமையலறைப் பகுதியில் தலைமைப் பதவியில் காணப்படுகிறார். அங்குதான் ஹோட்டலின் மிகவும் முக்கிய செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

சலாட் , சன்விச் , சிற்றுண்டிகள் தயாரிப்பது, விதம் விதமாக பானங்கள் தயாாிப்பது போன்ற பணிகளை ஆர்வமாகவும் கவர்ச்சிகரமாகவும் தனது தனிப்பட்ட முயற்சியின் மூலம் செய்கின்றார் Chef. துஷாந்தினி. இவர் தனது நேரடியான கவனத்தையும் உழைப்பையும் காட்டுவதனால் இந்த ஹோட்டலின் தயாரிப்புகளுக்கு அதிகமான மதிப்புக் காணப்படுகிறது.

இவரது சொந்த ஊர் மட்டக்களப்பிலுள்ள வந்தாறுமூலை எனும் கிராமமாகும். செங்கலடி மத்திய கல்லூரியில் க.பொ.த சாதாரண தரத்தை முடித்திருந்தார். துஷாந்தினியை நம்பி அவருக்குக் கீழ்ப்பட்ட சகோதரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இன்னும் பாடசாலை செல்லும் சிறார்கள்.

இவர் Shift அடிப்படையில் தனது பணியைத் தொடர்கிறார். காலை 6 மணியிலிருந்து மாலை 3 மணி வரையும் அல்லது பிற்பகல் 1 மணியிலிருந்து இரவு 10 மணிவரையும் பணியாற்றுகிறார். ஹோட்டலில் வேலை கூடிய நாட்களில் சளைக்காமல் மேலதிகமாகவும் வேலை செய்கின்றார். இதன்போது வேலை முடிந்தவுடன் ஹோட்டலில் பெண் ஊழியர்களுக்கான தங்குமிடத்தில் தங்குவது இவரது வழக்கமாகும்.

"முக்கியமாக எந்தவொரு துறையிலும் ஆர்வமிருந்தால் மட்டுமே முன்னேற முடியும். இந்த ஹோட்டல் துறையில் வரவிரும்பும் இளம்பெண்களை நான் வரவேற்கிறேன்" என்று கூறினார். ஹோட்டல் துறையில் பயிற்சி பெறவிரும்பும் இளம்பெண்களுக்கு JYDP பயிற்சியளித்து உற்சாகப்படுத்துகிறது.

அவர் கூறியதாவது சிலபேர் நினைப்பதுண்டு இந்த ஹோட்டல் துறை பெண்களுக்குப் பொருத்தமற்றது என்று. ஆனால் பெண்களுக்குப் பாதுகாப்பானதும் பொருத்தமானதாகவும் இத்துறை விளங்குகிறது. இதற்காகப் பெற்றோர்களுக்கும் பாதுகாவலர்களுக்கும் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவது அத்தியாவசியமானது. இவ்விழிப்புணர்வு பிள்ளைகளுக்குத் தன்னம்பிக்கை ஊட்டுவதோடு அவர்களது கனவுகளையும் சாதிக்க முற்படுவதற்கு ஏதுவாக இருக்கும்.



இலங்கையின் மொத்தச் சனத்தொகையில் அரைவாசியினர் பெண்களாவர். சுற்றுலாத்துறை என்பது உலகத்திலேயே முதலாவது இடத்தில் காணப்படுவதுடன் இலங்கையில் நான்காவது

இடத்திலும் பொருளாதாரத்தில் வலுவடைந்து காணப்படுகிறது. 2020 ஆம் ஆண்டளவில் 4.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருவார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது. பெண்களை உற்சாகப்படுத்தி உள்நாட்டு சுற்றுலாத்துறையில் பெண்களின் பங்களிப்பினைக் கூட்டுவது அவசியமானதாகும். இது பொருளாதாரத்தை அதிகரிப்பதுடன் ஊழியர் வளத்தையும் கூட்டும். “ஹோட்டல் துறையின் Jetwing Youth Development Programme (JYDP) பெண்களுக்கு சக்தியையும், நம்பிக்கையையும் கொடுப்பதோடு ஹோட்டல் துறைக்கு அர்த்தமுள்ள பங்களிப்பையும் அளிக்கின்றது” என்று Jetwing பொது முகாமையாளர் Robert Claesson கூறினார்.

## *CARE & SHARE* செயற்திட்டம்

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு 2018ஆம் ஆண்டு புதிய நிகழ்ச்சித் திட்டம் ஒன்றைப் பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம் ஆரம்பித்துள்ளது. அதாவது பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட பின்தங்கிய நிலையிலுள்ள குடும்பங்களைத் தேர்ந்தெடுத்து அவர்களின் குடும்ப உறுப்பினர் களுக்கு உதவுமுகமாக உடைகள், காலணிகள், பாடசாலை உபகரணங்கள், சிறுவர் விளையாட்டுப் பொருட்கள், உலர் உணவுப் பொருட்கள் என்பன பகிர்ந்தளிக்கப்பட்டன.

இதனை முன்னிட்டு முதற்கட்டமாகப் பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம் கொழும்பு வெள்ளவத்தை யில் நான்கு குடும்பங்களைத் தேரந்தெடுத்தனர். இதில் மூன்று குடும்பங்கள் பாடசாலை செல்லும் சிறுவர்களை உள்ளடக்கிய குடும்பமாகவும் மற்றொன்றில் 80 வயதுடைய தாயைப் பராமரிக்கும் குடும்பமாகவும் காணப்படுகிறது. இவர்களுக்கான உதவிப் பொருட்கள் பெண்கள் ஆய்வு நிறுவனத்தில வைத்து வழங்கப்பட்டன.

இது மட்டுமன்றி மட்டக்களப்பில் இயங்கும் சூர்யா அபிவிருத்தி நிலையமும், பாதிக்கப்பட்ட பெண்கள் நிறுவனமும் எமது நிறுவனத்துடன் இணைந்து கடந்த ஏப்ரல் மாதம் மட்டக்களப்பிலுள்ள ஒரு கிராமத்தைத் தெரிவு செய்து அங்குள்ள உதவி தேவைப்படும் சில குடும்பங்களுக்கு உதவி வழங்க ஏற்பாடுகள் செய்தனர். பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம் உடைகள், DSI Samson Group gift vouchers, பாடசாலை உபகரணங்கள் சிலவும் அன்பளிப்புச் செய்யப்பட்டது. Dr. Ramani Jayasundere, Ms. Shanthi de Silva, Ms. Mihiri Gabriel ஆகியோர் தனிப்பட்ட ரீதியாக இத்திட்டத்திற்கு உதவினர்.

பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம் அடுத்த கட்டமாக நவம்பர் மாதம் இந்நிகழச்சித் திட்டத்தை முன்னெடுக்க இருப்பதால் ஆர்வலர்கள் தங்களுடைய பங்களிப்புக்களை Ms. Fathima Mubarak இடம் 011-2595296 or fathima.mubarak@wercsl.org மூலம் தொடர்பு கொண்டு, வழங்க முடியும்.

***Harshani Pinnawala***
(Senior Programme Officer)





# பால் / பால்நிலை

பால் நிலை பற்றிய சமூக விஞ்ஞானப் பார்வை யானது இன்று மிகவும் கணிசமான அளவுக்கு கல்வி உலகிலும், சமூக உலகிலும் பேசப்படும் ஒரு விடயமாகி வருகிறது. இத்தகு சூழலில், இது தொடர்பான எண்ணக்கருக்களைப் புரிந்து கொள்ளக் கூடிய தேவையும் அதிகரிக்கிறது. பால் (Sex) மற்றும் பால்நிலை (Gender) ஆகிய எண்ணக்கருக்கள் பரவலாக கல்வியாளர்கள், ஆய்வாளர்கள், பெண்ணிலை எழுத்தாளர்களினால் எடுத்தாளப்படுகிறது. அடிப்படையில் பால் (Sex) என்பது உலகியல் வேறுபாட்டுத் தன்மைகளோடு தொடர்பு பட்டதாக இருக்க, பால்நிலை (Gender) என்பது சமூக ரீதியிலானதும், பண்பாட்டு ரீதியிலானதுமான அம்சங்களோடு தொடர்பு பட்டிருக்கின்றது என்பது மனங்கொள்ளத்தக்க தாகின்றது.

## பால் (Sex)

ஒரு விரிவான கருத்து நிலையில் எடுத்து நோக்கு மிடத்து, பால் என்னும் எண்ணக்கருவானது ஆண்கள், பெண்களுக்கு இடையிலான உயிரியல் மற்றும் பௌதீக வேறுபாடுகளையே முதன்மையாகக் கருதி நிற்கிறது என்று கூறலாம். ஒரு குழந்தை பிறந்தவுடனேயே அக்குழந்தையின் - உயிரியல், உடல் சார்ந்த வேறுபாட்டின் அடிப்படையில் - அது "ஆண் குழந்தை" (Boy), "பெண் குழந்தை" (Girl) என்றவாறு முத்திரை பதிக்கப்படுவதை (Labeled) இங்கு எடுத்துக் காட்டலாம்.

குழந்தை தனக்குரிய உயிரியல் / உடலியல் வேறுபாடுகளுடன் பிறந்த போதிலும், அவ்வேறுபாடு களுக்கும் அப்பால் வேறுபட்ட நடத்தைப் பண்புகள், சமூக நியமங்கள், பண்பாட்டு வரையறைகளை அவர்களைச் சார்ந்த சமூகம் அவர்களின் மீது சுமத்துவதாகவே சமூகவியலாளர்கள் வாதிடு கின்றனர். அதாவது இந்த விடயம் "சமூகமயமாதற் செயன்முறை" (Socialization) ஊடாக முன்னெடுக் கப்பட்டு நிறைவேற்றப்படுகின்றது. உயிரியல் ரீதியிலான ஆண் குழந்தைகள் ஆண்மைக்குரிய (Masculine Roles) வகிபாகங்களை எடுத்துக் கொள்கின்றனர். உயிரியல் ரீதியிலான பெண் குழந்தைகள் (Biological Females) பெண்மைக்குரிய வகிபாகங்களை (Feminine Roles) எடுத்துக் கொள்கின்றனர். தொடர்ந்தும் ஆண் குழந்தைகள் ஆண் நிலைப்படுத்தப்பட்ட வழிமுறையிலேயே (Masculine Ways) சிந்திக்கவும், செயற்படவும், தீர்மானம் மேற்கொள்ளவும் பயிற்றப் படுகின்றனர். அவ்வாறே பெண் குழந்தைகளும் பயிற்றப் படுகின்றனர்.

இதனை மேலும் தெளிவாகக் கூறுவதாயின், எவ்விதமான முற்சாய்வுகள் (Prejudices), வேறுபட்ட கருத்து நிலைகளும் அற்ற தனியன்கள் - தமது உயிரியல் / உடலியல் வேறுபாடுகளின் அடிப்படை யில் சுட்டிப்பான பால் நிலை சார் எதிர்பார்ப்புக்கள் (Specific Gender Expectation) மற்றும் வகிபாகங்களை நோக்கிச் சமூகமயப் படுத்தப்படுகின்றனர். இந்த இடத்தில் பெண்ணியவாத முன்னோடியும், சிறந்த பெண்ணிய எழுத்தாளருமான Simone de Behavior இன் கூற்று எடுத்தாளத்தக்கது. அவர் கூறுவார், ("One is not born a man but becomes one", One is not born a woman but becomes one" – "ஒருவர் ஆணாகப் பிறப்பதில்லை, மாறாக அவர் அவ்வாறு ஆக்கப் படுகின்றார்").

பிறப்பின் போது பிறப்புறுப்புக்கள் மற்றும் மனிதர்களின் இனப்பெருக்க உறுப்புக்கள் (Genitals / Reproductive Organs) ஆண், பெண் குழந்தைகள் மத்தியில் அத்துணை அளவுக்கு வேறுபாடுகளைப் பிரதிபலிப்பதில்லை. ஆயின், சமூகமே பால் நிலை சார்ந்த கட்டமைப்புக்கள் (Gender Constructions) ஊடாக பாரிய வேறுபாடுகளை உருவாக்கி, அவற்றை நிலைநிறுத்தவும் செய்கிறது.

Judith Butler என்னும் பெண்ணிய எழுத்தாளர் பால் (Sex) என்பது, இயல்பானது எனவும், மனித ஜீவிகளிடையே அதுவே முதலாவது வெளிப்பாடு எனவும் எடுத்துரைக்கின்றார். ஆனால் பால் நிலை (Gender) என்பது, இரண்டாவது நிலையாகவே பெற்றுக் கொள்ளப்படுகின்றது. அத்துடன் ஏலவே இயற்கையினால் நிர்ணயம் செய்யப்பட்டதன் மீது இயற்கையையும் மேவிய நிலையில் சுமத்தப்படுகிறது எனவும் எடுத்துக்காட்டுகின்றார். இந்தக் கண்ணோட் டத்தின் படி யூடித் (Judith) பால் என்பது சுயமாகவே ஒரு சமூகப் பொருள் வகுப்பு (Social Category) ஆக ஆகிவிடுவதாகவும் வாதிடுகின்றார். அதாவது ஆண், பெண் என்னும் அடிப்படையான தனித்து வமான வேறுபாடானது சமூகத் தனித்துவமான ஓர் அம்சமாக (Social Distinction) சமூகத்தினால் ஆக்கப்பட்டு விடுவதாக கூறுகிறார். எனவே யூடித் பட்லர் (Judith Butler) பால் (Sex) என்னும் எண்ணக் கரு பார்வைக்கு உயிரியலோடு நெருங்கிய தொடர்பு மிக்கதாக தோன்றினாலும் கூட, அது சமூகத் தலையீட்டினால் பெருமளவுக்கு அது

பால் நிலையாகவோ சமூக உருவாக்கம் பெற்று விடுவதாக விளக்குகிறார். எனவே பால் (Sex) என்பது, ஏலவே சமூக ரீதியில் கட்டமைக்கப்பட்டு விட்ட எண்ணக்கருவாகவுள்ளது.

பால் வேறுபாடு என்னும் எண்ணக்கருவைப் பூரணமாக நாம் விளங்கிக் கொள்வதற்கு இது தொடர்பிலான விஞ்ஞான பூர்வமானதும் உயிரியல் ரீதியிலானதுமான அர்த்தப்பாடும், வரைவிலக்கணமும் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும். மேலே விபரித்த ஆய்வாளரான யூடித்தின் கருத்துப்படி, உயிரியல் (Biology) என்பது, இயல்பாகவே அது தன்னளவில் விஞ்ஞான பூர்வமான கற்கைப்புலம் என்ற வகையில் சமூக முறைமை சார்ந்து நிலவும் வேறுபாடுகளையும் அது கருத்திற் கொள்வது முக்கியத்துவம் வாய்ந்த விடயமாக உள்ளது. எவ்வாறாயினும், பால்களுக்கிடையில் அடிப்படை வித்தியாசங்கள் இருப்பதாக நாம் ஒப்புக்கொண்டாலும் கூட அதனை பயன்படுத்துவதற்கான தர்க்க ரீதியான அல்லது பகுத்தறிவு சார்ந்த காரணம் எதுவும் இல்லை எனவும் அவர் வலியுறுத்துகின்றார்.

தொடர்ந்து இது பற்றி யூடித் விளக்க முற்படும் போது பால் (Sex) என்பது வெறுமனே ஒரு "பகுப்பாய்வு சார்ந்த வகைப்படுத்தல் / பொருள் வகுப்பு" மட்டுமன்று எனக் கூறுகின்றார். (Sex is not an analytical category). அது ஒரு நியமம் சார்ந்த பொருள் வகுப்பே ஆகும். (Normative Category) அதாவது இப்பதம் அல்லது எண்ணக்கரு, ஆண் - பெண் இரு சாராரினதும் நடத்தையை வரையறுப்பதற்கான அல்லது ஒழுங்கமைப்பதற்கான விதிகளை உருவாக்குவதாகவும் உள்ளது. எனவே "பால் என்பது ஒரு சமூகப்பாங்கான பொருள்வகுப்பு" என்கின்ற முடிவுக்கு யூடித் வருகிறார். எவ்வாறாயினும் அவரின் இக் கருத்துடன் (அபிப்பிராயத்துடன்) உடன் படாத சில பெண்ணிய எழுத்தாளர்கள் அது அடிப்படையிலும் இயல்பிலும் உயிரியல் பாங்கானது என்று வலியுறுத்துவதும் கவனிக்கப் படுகின்றது.

பெருமளவான சமூகவியல் ஆய்வுகள், ஒரு நபர் ஏதாவது ஒரு குறிப்பிட்ட பால் அல்லது பாலியல்பு (Sexuality), மற்றும் பால்நிலையை (Gender) சார்ந்திருக்க வேண்டும் என்பதாகவே அனுமானிக்கின்றன. எவ்வாறாயினும், பல்வேறு சந்தர்ப்பங்களில் பலவேறு ஆய்வாளர்களினால் இவ்விரண்டு எண்ணக்கருக்களும் மாறி மாறிப் பயன்படுத்தப்படுகின்றன. சில சமயங்களில் பால் என்பது பாலியல்பைக் குறிக்கவும் பயன்படுத்தப் படுகின்றது. தந்தையாதிக்க சமூகக் கட்டமைப்பினுள் இவ்வெண்ணக்கருக்கள் அவரவர் சிந்தனை மட்டம், நலன்களுக்கு ஏற்ப மாற்றியும், விரிந்தும், குறுகலாகவும் பயன்படுத்தப்படுகின்றமையை நாம் கருத்திற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

**சந்திரசேகரன் சசிதரன்**
சிரேஷ்டவிரிவுரையாளர் (சமூகவியல்)
கிழக்குப்பல்கலைக்கழகம்.

# நட்சத்திரங்களுடன் ஒரு மாலைப்பொழுது ....

சர்வதேச மகளிர் தினத்தின் இன்னுமொரு செயற்பாடாக பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம் இதுவரை காலமும் "ஆண்களால் மட்டுமே சினிமாத்துறையில் சாதிக்க முடியும்" என்பதை உடைத்தெறிந்த இலங்கையின் முதலாவது பெண்படத்தயாரிப்பாளரான சுமித்ரா பீரிஸ்சையும், இலங்கையின் சினிமாத்துறையில் இன்றைக்கும் மின்னிக்கொண்டிருப்பதோடு ரசிகர்களின் மனங்களில் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்திருப்பவருமான ஐராங்கனி சேரசிங்கவையும் பாராட்டிக் கௌரவித்தது.

பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தின் அரங்க மண்டபத்தில் மார்ச் மாதம் 7ஆம் திகதி பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தின் நிறுவுனரும், ஆளுனருமான கலாநிதி செல்வி திருச்சந்திரன் அவர்களின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இதன்போது எமது நாட்டு இளம் சந்ததியினருக்கு இந்த மேம்பட்ட இரண்டு கலைஞர்களும் முன்மாதிரியாக உள்ளார்கள் என்பதை கலாநிதி செல்வி திருச்சந்திரன் குறிப்பிட்டிருந்தார்.

பீரிஸ் அவர்கள் சமீபத்தில ஏப்பிரல் மாதத்தில் வெளியிட்ட "வைஷ்ணவி" என்னும் திரைப்படத்தை நவீன Red Epic camera மூலம் எடுத்த இலங்கையின் முதலாவது பெண் படத் தயாரிப்பாளரானார். இவர் சர்வதேச ரீதியிலும், தேசிய ரீதியிலும் பல்வேறு வகையான விருதுகளையும் வென்றுள்ளார். சிறந்த படத்தயாரிப்பாளர், இயக்குனர், பதிப்பாளர், போன்றவற்றுக்கும் விருதுகளைப் பெற்றமை

குறிப்பிடத்தக்கதாகும். Gehenu Lamai, Ganga Addara and Yahaluvo போன்றவை அவரது பிரசித்தி பெற்ற படங்களாகும்.

சுமித்ரா பீரிஸ் அவர்கள் மிகவும் இளமைக் காலத்திலேயே துணிகரமாக விரும்பி இந்தத் துறையில் சாதனை படைக்க வேண்டும் என்ற லட்சியத்தோடு இதனைக் கையிலெடுத்துக் கொண்டார். இதற்காக London School of Film Technique, Diploma in Film Direction and Production (1957–1959) என்ற விருதைப் பெற்றுக்கொண்டார். அக்காலத்தில் இப்பாடத்துறையைக் கற்றுக் கொண்ட ஒரேயொரு பெண்மணி இவர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இந்நிகழ்வின் இறுதியில் Yahaluvo எனும் திரைப்படம் திரையிடப்பட்டது. தயாரிப்பாளர், நடிகைகள் குழுமத்துடன் இருந்து பார்த்து ரசித்தனர். மேலும் இப்படம் சம்பந்தமான கலந்துரையாடலில் ஒவ்வொருவரும் மிகவும் உற்சாகத்துடன் தங்களது கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.அந்த மாலைப்பொழுது மறக்க முடியாத பொழுதாகியது.

ஷிராணி மில்ஸ்
நிறைவேற்றுப் பணிப்பாளர்




# பாதுகாப்பான இரவுகள்! பாதுகாப்பான தெருக்கள்!



















# பாதுகாப்பான இல்லங்கள்!
















சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம் 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 5ஆம் திகதி நடைபவனி ஒன்றை ஒழுங்குசெய்தது. கொழும்பு புறக்கோட்டை புகையிரத நிலையத்தில் இருந்து ஆரம்பித்து இந்நடைபவனி காலிமுகத் திடலில் நிறைவுபெற்றது. இதில் ஆண் பெண் வேறுபாடின்றி பொது மக்கள், பெண்கள் பாதுகாப்பு நிறுவனங்கள், கல்விமான்கள், அரசியல்வாதிகள் என எல்லாத்துறை சார்ந்தவர்களும் பெண்களின் உரிமைக்காகவும் பாதுகாப்புக்காகவும் ஒன்று சேர்ந்து குரல் கொடுத்தனர்.

# புதுமைகள் பரப்பு பெண்ணே...



ஆதார சுருதி முதல்
ஆசர வைக்கும் நிலா வரை
ஆனவளும் நீயே
எம்மை ஆக்கியவளும் நீயே
உன் நிமிர்ந்த நன்னடை நிதர்சனமானது

நேர்கொண்ட பார்வைகள்
பிரசன்னமானது - நீ
பற்ற வைத்த நெருப்பொன்று பரபரப்பானது
பாரினில் உன்புகழ்
பரஸ்பரமானது - பலர்
வேரினில் உன் நிழல் வீரியமானது
வீட்டிற்குள்ளே உன்னைப் பூட்டி வைத்தோர்
நாட்டிற்குள்ளே உன்னை நாடி வந்தார்
அடுப்பூது என்று உன்னை அடக்கி ஆண்டவர்
அடவி ஆள இன்று ஆயத்தமானரோ
பெண்மை என்னும் சொல்லால் மெழுகாய்
உருக்கிய உன்னை
மேன்மை எனும் சொல்லால் மெருகூட்டினாயே
ஆறடிச் சேலைக்குள் அடங்கி நடக்கச் சொன்னார்களே
நீ அதையும் தாண்டி ஆச்சரியப்படுத்தினாயே......!

**வவுனியா மிதிலைமாறன்**

**சிந்தனைத் துளிகள்**

**பெண்ணியம் என்பது பெண்களை வலுப்படுத்துவதொன்றன்று. பெண்கள் ஏற்கனவே பலம் வாய்ந்தவர்கள். இந்தப் பலத்தை உலகம் நோக்கும் விதத்தை மாற்றுவதே பெண்ணியமாகும்.**

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

**எங்களுடைய பெண்பிள்ளைகளை ஆண்பிள்ளைகளைப் போல் வளர்க்கத் தொடங்கி விட்டோம் இது பாரட்டுக்குரியது. ஆனால் எமது ஆண்பிள்ளைகளைப் பெண்பிள்ளைகள்போல் வளர்க்கத் துணிவோர் மிகச்சிலரே.....**

*- Gloriya Steinem*
*Jounalist & Political Activist*

# திலகமிழந்தவள்!



முழுமையான வாழ்க்கை
நீ வாழ்ந்து முடிப்பதும் அல்ல
உன்னை அழித்துக் கொள்வதும் அல்ல
சாதித்துக் காட்டுவது தான்


திலகமிழந்தால் நீ பெண்ணில்லையோ?
ஏன் அஞ்சுகிறாய்?
விதியை வைத்து என்ன பயன்?
பெண்ணே நீ துணிந்தெழு

இதுதான் உலகம்
இங்குதான் நீ வாழவேண்டும்
சாதித்து வாழ்
பிறர் உன்னை சோதிக்கும் நிலையில்
வாழ்ந்து விடாதே

உன் பெண்மை முடிந்து விடவில்லை
உன் ஆற்றலும் மடிந்து விடவில்லை
உன் உணர்வுகளுக்கு
உயிரோட்டம் கொடு
சமூகத்தின் கானல் நீர் பார்வையினை
தகர்த்தெறி
நாளை விடியும் சூரியன்
உனக்கும் ஒளிவீசும்..

- விநாயகமூர்த்தி - வசந்தா

# கட்டை அவிழ்த்திடடி



கட்டை அவிழ்த்திடடி! கட்டி வைத்த
கட்டமைப்புகள் படி நீ வாழ்ந்தது போதும்!

எட்டி மிதித்திடடி! எட்டி நின்று
கேலி செய்யும் மாந்தர்களை!

தட்டி திறக்கவில்லை அந்த சத்தமும்
சட்டங்கள் காதினில் கேட்பதில்லை!

பெற்று எடுக்கவில்லை அதனால் தான்
பெற்ற பிள்ளையைப் போல பார்ப்பதில்லை!

பிஞ்சு குழந்தையடி! பெறும் தாய்க்கு
தான் அந்த வேதனை மாறவில்லை!

பட்டும் திருந்தவில்லை மாந்தர் சிலர்
செய்த பாவங்கள் யாவும் தீரவில்லை!

சுட்டு எரித்திடடி! சூழ்நிலையை காரணம்
காட்டி கொண்டாடும் ஊரையே!

சொல்லில் புரிய வைப்போம்
இல்லையென்றால்
வேரோடு சாய்ப்போம்!

செல்வா (எ) செல்வராணி
பயிர் அமைப்பு
தேனூர் பெரம்பலூர்

# இதயபூர்வமான நன்றிகள்....

பெண்கள் கல்வி ஆய்வுநிறுவனத்தால் துணிகரமாகவும் வெற்றிகமாகவும் உலக மகளிர் தினத்தை முன்னிட்டு நடைபவனி ஒன்றை நடாத்தி முடிப்பதற்கு பொருளாதார ரீதியாகவும், பொருள் ரீதியாகவும், சேவைகள் ரீதியாகவும் பங்களிபபுச் செய்த பின்வரும் நிறுவனங்களுக்கும், தனிநபர்களுக்கும், நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

**பொருளாதார ரீதியான பங்களிப்புகள்**

1. Vallibel One PLC
2. Dialog
3. Social Scientists Association (SSA)
4. Small Axe (Pvt) Ltd
5. Ceymondu Travel (Pvt) Ltd
6. Perfect One (Pvt) Ltd - ( A Unilever Subsidiary)
7. Seylan Bank PLC
8. Mr. & Mrs. M. Selvaratnam

**அனுசரணையாளர்கள்**

1. Nestle Lanka PLC – sponsorship of 1000 Maggi Noodles Cups
   *Mr. Samantha Samarasinghe and Team*
2. Ceylon Biscuits Limited- sponsorship of Samaposha promo packs
   *Mr. Janaka Boteju and Team*
3. Kumaran Book House (Pvt) Ltd – part sponsorship of banners
   *Mr. Kumaran and Team*
4. Picture Poets – part sponsorship of photography
5. Ceylon Cold Stores PLC (Elephant House) – Sponsorship of Cream Soda banners and stall
   *Mr. Nadina, Mr. Premalal and Team*
6. Renuka Foods PLC – Rich Life milk at a Concessionary rate
   *Mr. Nishantha Jayasuriya and Team*

**இந்த மகளிர்தின நடைபவனி வெற்றிகரமாக நடைபெற சேவை ரீதியாக உதவியவர்கள்**

1. Sri Lanka Police, OIC and Team, Fort Police Station – Security and traffic control
2. Central Bus Station Fort – Transport for participants
3. A.U. Entertainments Kalubowila – Sounds, Music & Lighting *Mr. Asanka and Team*
4. Mr. Piyal Wijesiri – Superintendent, Fort Railway Station
5. Stationery supplies - Mr. Terrance and Team
6. Sri Lanka Port Management & Consultancy Services – Galle Face Green Reservations *Mr. Prashan & Mr. Jayawickrama*

**செய்திச் சேவைகள்**

7. Sri Lanka Rupavahini – 8 pm Main News Bulletin
8. Wijeya Newspapers - Sunday Times & Daily Mirror – Women's Day Supplement
9. Lake House Newspapers – Dinamina & Daily News

# கிழக்கிற்கு விஜயம்

கிழக்கு மாகாணத்தின் குறிப்பாக மட்டக்களப்பு, அக்கரைப்பற்று ஆகிய இடங்களுக்கு அங்குள்ள பெண்களின் இன்றைய நிலை பற்றி ஆராயும் முகமாக பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டமாக விஜயம் மேற்கொண்டனர். இதன் போது அங்குள்ள உள்ளூர் பெண்கள் அபிவிருத்தி நிறுவனங்களின் அலுவலர்களுடன் கலந்துரையாடலின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள்



### சந்திப்புகள்

- சூர்யா பெண்கள் அபிவிருத்தி நிறுவனம் மட்டக்களப்பு
- பாதிக்கப்பட்ட பெண்கள் நிறுவனம் அக்கரைப்பற்று
- நீதிக்கான பறை & மூன்றாவது கண்





# மகளிர் தின ஊர்வலம் 2018 நம்பிக்கையின் கூற்று

- கிராமப் புறங்களிலிருந்தும் நகர்ப்புறங்களிலிருந்தும் எழும்பும் எம் சகோதரிகளின் குரலை நாங்கள் கேட்கின்றோம்.
- பட்டினி, வறுமை, பாலியல் வன்முறை, துஷ்பிரயோகம் என்பவற்றால் பாதிக்கப்பட்டு தம் குரலை இழந்து நோவினால் வாடும் பெண்களின் துன்பத்தை நாம் புரிந்துகொண்டோம்.
- உரிமையை இழந்து, உரிமைகள் பறிக்கப்பட்டு எம் சகோதரிகள் மௌனத்தோடு சிந்தும் கண்ணீரை நாம் காண்கின்றோம்.
- எமது சகோதரிகளின் கண்ணீரை, அவர்களின் கூக்குரலை, அவர்களின் துன்பத்தை காணும் நாம், இன்று, இந்நேரம் பெண்களுக்கு ஓர் சுமூகமான, சமத்துவமான உலகை, எதிர்காலத்தை உருவாக்க நாம் எடுத்துள்ள நடைபயணத்தைத் தொடர்ந்து நடத்த உறுதிபூணுவோம்.
- எனவே, இங்கிருந்து நாம் பாதுகாப்பான இரவுகள், வன்முறையற்ற தெருக்கள், பாதுகாப்பான வீடுகளைக் கொண்ட ஓர் எதிர்காலத்தை நோக்கி நடப்போம். நம்பிக்கையோடு, திடமனதோடு முன்னோக்கி நடப்போம்! வாருங்கள்!

# கருகிய மலர்கள்

சிறுமி ஆசிபா 07 பேரால் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டுக் கொடூரமான முறையில் கொல்லப் பட்டது எல்லோர் மனதையும் உலுக்கிய சம்பவமாகும். இப்போது எங்கு பார்த்தாலும் பெண்களுக்கும் சரி பெண்குழந்தைகளுக்கும் சரி பாதுகாப்பு என்பது ஒரு பெரிய கேள்விக் குறியாகவே உள்ளது.

எந்தச் சூழ்நிலைகளையும் சாதகமாகப் பயன்படுத்தும் சந்தர்ப்பவாதிகள் அதிகம். இப்போது வெளியில் பெண்கள் செல்லமுடியாத பயங்கரமான சூழ்நிலைகளுக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருக் கிறார்கள்.

இந்நிலையில் பெண்கள் மீதான குற்றச்சம்பவங்கள் குவிந்து கொண்டுள்ளன. பாலியல் வன்முறைகள், என்பதைத்தாண்டி பெண்களுக்கெதிரான மனரீதியான, மதரீதியான வன்முறைகள் எனப் பட்டியல் நீண்டு கொண்டே வருகிறது. இந்தியச் சட்டத்தின்படி பாலியல் வன்முறைக்குட்பட்ட குழந்தைகளின் படங்களை வெளியிட முடியாது. ஆனால் ஆசிபாவுக்கு மட்டும் விதி விலக்கானது.

தனது குழந்தைக்கு நேர்ந்த கொடுமையை நினைத்து அந்தத் தாய் கதறும் போது பார்ப்பவர் களின் நெஞ்சம் பதை பதைக்கிறது. ஆசிபா காஷ்மீரில் இருக்கும் கத்துவா என்ற கிராமத்தைச் சேர்ந்த 8 வயதுச் சிறுமி தினமும் காட்டுப்பகுதியில் குதிரை மேய்ப்பதை அவதானித்துக் கடத்திக் கொலை செய்திருக்கிறார்கள். இதற்குரிய நீதியான விசாரணைகள் நடத்த விடாது அரச அதிகாரிகளே முட்டுக்கட்டையாக இருந்திருக்கிறார்கள். இது போன்ற சம்பவங்கள் பெண்களையும், "பெண் குழந்தைகளையும் எவ்வாறு பார்க்கப் போகிறோம், பாதுகாக்கப் போகிறோம்" என்ற அச்சதை எழுப்புகிறது. தினமும் காலையில் எந்தப்பெண் பிள்ளைக்கு? எங்கு நடந்தது? என்ன நடந்தது? என்னும் கேள்விகள்தான் மனதில்!

ஆரம்பப் பாடசாலை மாணவியான றெஜீனா தனது வீட்டுவாசலில் வைத்தே கடத்தப்பட்டாள். தனது உறவினர் ஒருவரால் கடத்தப்பட்டதாக விசாரணைகளின் பின் அறியக்கிடைத்தது. வீட்டிலிருந்து 500km தொலைவிலுள்ள கிணற்றிலிருந்து உயிரற்ற நிலையில் கண்டெடுக்கப்பட்டாள். இன்று சிறுமி றெஜீனாவின் நிலை என்ன? இதற்கு யார் என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? விபரம் புரியாத அந்தக் குழந்தைக்கு என்ன தெரியும்?

ஒரு சூழ்நிலை குறித்து ஆராய்ந்து விவாதங்கள் நடத்திக் கருத்துக்களைத் தெரிவித்துப் போராட்டங்களை நிகழ்த்தி அவற்றுக்கான நீதி கிடைக்கலாம் சில சமயம் கிடைக்காமல் போகலாம் என்கிற நிலைமையில் அடுத்தடுத்த பாரதூரமான சூழ்நிலைகள் உருவாகிக் கொண்டே வருகின்றது என்பது வருத்தத்திற்குரிய விடயமே. ஆறு வயதுக் குழந்தையிலிருந்து அறுபது வயதுப் பெண்களையும் விட்டு வைக்காத மனித மிருகங் களுக்கு என்ன தண்டனை கொடுப்பது?




# எமது நூலகத்தின் புதிய நூல்கள் சில





பெண்கள் நீதிபதிகளாக





காஷ்மீர்





வெட்டுக்கிளிகளை
உற்றுக் கேட்டல்





Gender Trials
Jennifer L. Pierce
University of California Press





The RTI Story: Power to the People
Aruna Roy Roli Books





Caste and Race in India
G. S. Ghurye
Sage Publications



Aluyam Sihinaya
Thamilini Jeyakumaran
Thothanna Publishing House




JVP 1986-1990
Dharman Wickremaretne
Jayanath Ranasinghe R. R
and Sons



Bathing on the Neranjane
K. K Saman Kumara
Agahasa Publishers

# WERC Auditorium

WERC







## WERC Auditorium

| Hall Charges | A/C | Non A/C |
|---|---|---|
| Full Day (8 hrs) | 10,000 | 8,000 |
| Two hours | 3,750 | 2,500 |
| For every additional hr. | 800 | 550 |

| Additional Facilities | 5000 |
|---|---|
| Over head projector | |
| Refreshment on request | |

Service Charges 10% of the Total Amount
Maximum seating capacity – 50
Ample parking space.

The hall is purpose-built for bringing people together. Located in the heart of Colombo with easy access from all directions, it is the ideal venue for trainings, meetings and workshops. The auditorium accommodates up to 50 participants and includes connected spaces for dining and group discussions.

பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்
58, தர்மராம வீதி, கொழும்பு - 06
தொலைபேசி: 2595296, 2590985
தொலைநகல்: 2596313

தொகுப்பு : சிரானி மில்ஸ்,
ஜெயமாலா சிவச்செல்வம்




Women's Education and Research Centre
58, Dharmarama Road,
Colombo 00600, Sri Lanka

T.P. : +94-11-2595296/ +94-11-2590985
Fax : +94-11-2596313
E-mail : womedre@gmail.com
womedre1@gmail.com
werc1982@gmail.com
Web : www.wercsl.org


To: Noolaham Foundation,
185 Aadiyapatham Road,
Kokkuvil
Jaffna.